# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.182/2023

### அ.சா. 4 (LW 4 )

| **பெயர்** | இளங்கோ | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | வெள்ளைச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **06.10.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது வேம்பார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். 10ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்கில் இறந்து போன கண்ணனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும் கண்ணனும் என்னிடம் வரவு, செலவு வைத்திருந்தார்கள். முருகன் 4லட்ச ரூபாயை கடனாக பெற்றிருந்தார். 12. 05.2023 தேதி அன்று முருகன்,இறந்து போன கண்ணன் ஆகியோர்கள் ஒன்றாகத்தான் வசித்து வருவதால் அவர்கள் இடத்திற்கு சென்று நான் மேற்படி கடனை கேட்டேன். அப்போது நான் பணம் கேட்கும் போது முருகன் , முருகன் மகன் சதீஷ், கார்த்திக்ராஜா, பஞ்சு, ஆகியோர்கள் இருந்தார்கள். நான் கடனை பற்றி கண்ணனிடம் கேட்டேன். அவர் சிறிது காலம் கழித்து ரெடி பண்ணி தருவதாக என்னிடம் சொன்னார். முருகன் வகையறாக்கள் எங்களை இல்லாமல் வேறு சில நபரிடம் கடன் பெற்றுள்ளார்கள். பணம் கேட்கும் போது கண்ணனுக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நான் அப்போது உறவினர்களிடம் கொடுத்த பணத்தை கேட்டால் சண்டைக்கு வருகிறீர்களா என கேட்டேன். கீழே கிடந்த கல்லை எடுத்து கண்ணன் என் மீது எறிந்தார். கார்த்திக்ராஜா, சதீஷ், முருகன் ஆகியோர்கள் என்னை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். நீங்கள் வர வேண்டாம், நாங்கள் பணத்தை உங்களிடமே ஒப்படைக்கிறோம் என சொன்னார்கள். 2 நாட்கள் பின்பு கண்ணன் தூக்கில் தொங்கி இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கின் புகாரில் பஞ்சு என்னையே கல்லை கொண்டு வந்து அடிக்கிறாய் என்றும் அதே கல்லை கொண்டு அடிச்சு எப்படி கொல்கிறேன் என்று சொல்லி நான் முறைத்துக் கொண்டே அங்கிருந்து சென்று விட்டதாக புகாரில் கூறியுள்ள விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அன்றே 14.05.2023 அன்று இரவு முழுவதும் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் கல்லை எடுத்து எறிந்த கண்ணன் கடன் பிரச்சனையால் மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணன், முருகன் ஆகியோர்களுக்கு கடன் கொடுத்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கண்ணனிடம் தனிப்பட்ட முறையில் கடன் கொடுத்து விட்டு கந்து வட்டி கேட்டு தொடர்ந்து வற்புறுத்தியதன் பேரில் கண்ணன் மன உளைச்சலுக்கு ஆளானார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.06 20:11:08 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.